**DEPOSITION OF WITNESS**
**( Rule-42 C.R.P)**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, LALGUDI.**

**Calendar :**
**Miscellaneous : Case No.CC.62 of 2016**
**Preliminary Register :**
**Sessions :**

**Deposition of Witness for Prosecution : PW6**
**Defence :**
**Court :**

**Name**/பெயர் : குமார்

**Father's/ Husband Name :** முத்து
தகப்பனார்/கணவர்பெயர்

**Village/** கிராமம் :

**Taluk** / வட்டம் :

**Caste** / இனம் :

**Calling/** வேலை :

**Religion/** மதம் :

**Age/** வயது :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 27.09.2021.**

முதல் விசாரணை

நான் வளவனூரில் குடியிருக்கிறேன். நான் தனியார் நிறுவனத்தில் காவலராக பணி புரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது **அ.சா.ஆ.**2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 13.05.2015 அன்று காலை காட்டூர், கொத்தமங்களத்தில் உள்ள

எனது மாமனார் கலியசுந்தரம் வீட்டிற்கு சென்றிருந்தேன். அப்போது காலை 9.30 அல்லது 10 மணியளவில் எனது மாமனார் கலியசுந்தரம் வீட்டு வாசலில் நான், சரவணன் என்பவரும் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது இலால்குடி போலிசார் அங்கு வந்து, பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்தார்கள். அங்கு வைத்து போலிசார் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். என்னுடன் சேர்ந்து சரவணன் என்பவரும் கையொப்பம் செய்தார். போலிசார் இது சம்மந்தமாக என்னை விசாரணை செய்தார்கள்.

குு.வி (எதிரிகள் தரப்பில் )

என்னுடன் பார்வை மகஜர் ஆவணத்தில் கையொப்பம் செய்த சரவணன் எனது மைத்துனர். மேற்படி சரவணன் அ.சா.1 கலிய சுந்தரத்தின் கொளுந்தியாள் மகன் என்றால் சரிதான். அ.சா.1 கலிய சுந்தரம் தகராறின் போது அடிப்பட்டுவிட்டார் என்பதற்காக அவரை பார்ப்பதற்கு மருத்துவமனைக்கு வந்திருந்தேன். அந்நேரத்தில் அ.சா.1 கலிய சுந்தரம் புகார் அளிப்பதற்காக காவல் நிலையம் சென்றார் நானும் அவரோடு சென்றேன். காவல் நிலையத்தில் வைத்து தான் பார்வை மகஜர் ஆவணத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. ஏப்ரல் மாதம் 25 அல்லது 26 ஆம் தேதி தகராறு நடந்ததாக தெரிந்து கொண்டேன். சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து தான் பார்வை மகஜர் ஆவணத்தில் கையொப்பம் செய்தேன் என்றாலும், அ.சா.1 எனது மாமனார் என்பதால், அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.